# இரகசிய பேரங்கள்- இரகசிய ஒப்பந்தங்கள்!

இரகசிய பேரங்கள், சதிகள் மூலம் அரசியல் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வுகாணவே முடியாது. பாசிஸ்டுகளின் முகத்தில் மாறிமாறி அறைவது போல பலமுறை இந்த உண்மை நிரூபிக்கப்பட்ட பின்னும், பாசிஸ்டுகள் பாடம் கற்றுக் கொள்ள வலுக் கட்டாயமாக மறுக்கிறார்கள். அகாலிகளைப் பிளவுபடுத்தி ராஜீவ்-லோங்கோவால் கையெழுத்திட்ட பஞ்சாப் ஒப்பந்தம் துப்பாக்கித் தோட்டாக்களால் துளைக்கப் பட்டுவிட்டது. அசாம், மிஜோ ஒப்பந்தங்கள் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கின்றன. பூடாசிங்- கெய்சிங் நடத்தும் கோர்க்காலாந்து பற்றிய இரகசிய பேரங்கள் 'குக்ரி'யினால் குத்திக் கிழிபடுகின்றன. ஆனாலும் பாசிஸ்டுகள் இரகசிய பேரங்களையும், சதிகளையும் தொடர்கிறார்கள்.

''ஜே.வி.பி.யினர் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு வன்முறையைக் கைவிடுவாகள்; ஜே.வி.பி.க்கு எதிரான தடை நீக்கப்படுகிறது. பயங்கரவாத குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தவிர மற்றவர்கள் விடுதலை ஆவார்கள்''- இப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஒரு ஜே.வி.பி.வக்கீலையும் ஒரு கிருத்துவப் பாதிரியையும் வைத்துக் கொண்டு பத்திரிக்கையாளர்களிடம் அறிவித்தார் லலித் அதுலத்முதலி. அடுத்த நாளே அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்படவே இல்லை; நிபந்தனைகளை ஏற்கவும் இல்லை என்று மறுப்பறிக்கை விட்டார் ஜே.வி.பி.தலைவர் ரோஹண விஜயவீரா. இடைத்தரகராயிருந்த பாதிரியார் அயர்லாந்துக்குக் கம்பி நீட்டிவிட்டார். ஜே.வி.பி. மறுத்தாலும், மீண்டும் தடை விதிக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

''இலங்கையின் வடக்குக் கிழக்கு மாநிலங்கள் முழுக் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. ஏதோ கொஞ்சம் வன்முறை நீடித்தாலும், புலிகள் பங்கேற்காவிட்டாலும் விரைவில் தேர்தல் நடக்கும். இந்திய இராணுவம் கட்டங் கட்டமாக இலங்கையிலிருந்து வெளியேறும். இந்திய இராணுவ மந்திரி பந்த் விரைவில் கொழும்புபோய் ஜெயவர்த்தனேயுடன் விரிவாகப் பேசி அதைமுடிவு செய்வார்.'' என்று ராஜீவுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக காமினி திசநாயகே பத்திரிக்கையாளர்களுக்குப் பேட்டியளித்துள்ளார்.

''48 மணி நேரத்துக்குப் போர் நிறுத்தம் செய்துவிட்டு இந்திய ராணுவம் பாசறைக்குள் இருக்கும். அப்போது புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பார்கள். அமைக்கப்படும் இடைக்கால மாகாண சபையில் பாதி இடங்கள் புலிகளுக்கும், மீதி மற்ற அமைப்புகளுக்கும் ஒதுக்கப்படும். ஏறக்குறைய 18 கோடி ரூபாய் புனர்வாழ்வு நிதியளிக்கப்படும்'' என்கிற இரகசிய பேரம் புலிகளின் சில தலைவர்களுக்கும் ''ரா''வுக்கும் ஏற்பட்டிருப்பதாக மட்டக்கிளப்பில் இருந்து பத்திரிக்கைச் செய்தி கூறுகிறது. இந்த அடிப்படையில் விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகுமாம்!

பிடித்து வைத்திருந்த இந்திய சிப்பாயைப் புலிகள் விடுதலை செய்துள்ளனர்; புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதாகவும், ஏதோ ஒரு மட்டத்தில் தொடர்பு நீடிப்பதாகவும் ராஜீவ் பலமுறை கூறியுள்ளார். புலிகளும் அதை மறுக்கவில்லை. ராணுவ ரீதியில் பலவீனமாக இருந்தாலும், அரசியல் ரீதியில் வலுவாக இருப்பதாகப் புலிகள் கூறுவது அவர்கள் நடத்தும் பேரத்தைக் குறிக்கிறது.

பேரங்கள், ஒப்பந்தங்கள் பற்றிய தகவல்கள் ஈழ விடுதலைக்கு எதிரான சக்திகளிடமிருந்தே வந்துள்ளன. ஆகவே உறுதி செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும் அடிப்படையான ஒரு கருத்தை வலியுறுத்துகிறோம். ஈழப் போராளி அமைப்புகள் ஒன்று சேர்ந்து திம்பு பேச்சு வார்தையின்போது முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் தாம் சரியானவை; நியாயமானவை. ஈழத் தமிழர்களின் நலன்களை உறுதி செய்யக் கூடியவை. பகிரங்கமான முறையில் அவை ஏற்றுக் கொள்ளப்படுவதைத் தவிர வேறு எதுவும் ஈழ மக்களின் நலன்களை அடகுவைப்பதாகும். இரகசிய பேரங்கள், சதிகள் இரகசிய ஒப்பந்தங்கள் அனைத்தும் இந்திய, இலங்கை மக்களுக்கு எதிரானவை.

இந்திய ராணுவ ஆக்கிரமிப்பை ஆயுதந்தாங்கி எதிர்த்துப் போரிடும் காரணத்துக்காகத்தான் புரட்சிகர சக்திகள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள். ''ரா''வின் சதிகளைபற்றியும், ஈழ எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றியும் வெகுதூரம் புலம்பிவிட்டு அவர்களுடனேயே புலிகள் இரகசிய பேரங்கள் நடத்துகிறார்கள். சகபோராளிகளிடமும், புலிகள் மேற்கொள்ளும் பாசிச நடவடிக்கைகளைப் போலவே, இரகசிய பேரங்களையும் இரகசிய ஒப்பந்தங்களையும் திணிக்க முயலுவதையும் ஈழ மக்கள் எதிர்த்திட வேண்டும். ஈழ மக்கள் பெருமளவு உயிர்த்தியாகம் செய்ததும், இரத்தம் சிந்தியதும் சில குழுத் தலைவர்களின் சுயநலன்களை அடைவதற்காக அல்ல! ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையைநிலைநாட்டுவதற்கே என்பதை ஈழத் தமிழர்கள் தமது சமரசமற்ற